18.04.2026 OS.No. 341/2020

சாட்சி : DW 1 சத்யா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. தாவாச் சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியமாக இருந்தது என்றால் என் பெரியப்பா நாச்சியப்பனுக்கு பாத்தியப்பட்டது, அது எவ்வகையில் பாதியிப்பட்டது என்றால் சுய சம்பாத்தியத்தில் வாங்கி சொத்து என்று என் பெரியம்மா சொல்லியுள்ளார். கிரையப்பத்திரங்கள் என் பெரியம்மா வசம் உள்ளதா என்றால் அதுபற்றிய விபரம் எனக்குத் தெரியாது. நாச்சியப்பனின் அப்பா, அம்மா பெயர்கள் பற்றிய விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் எந்த ஊர் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நாச்சியப்பன் பிறந்த ஊர் பற்றிய விபரம் எனக்குத் தெரியுமா என்றால் வெற்றியூர். நாச்சியப்பனுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனைபேர் என்றால் ஒரு அக்கா உள்ளார். அக்கா பெயர் எனக்குத் தெரியுமா என்றால் அக்கா பெயர் கல்யாணி. மேற்படி கல்யாணிதான் இந்த வழக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

2. நாச்சியப்பன் அம்மா, அப்பாவிற்கு பூர்விக சொத்து இருந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த சொத்து என்ன ஆனது என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. நாச்சியப்பனும், அவர் உடன் பிறந்த சகோதரி வாதி கல்யாணியும் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நாச்சியப்பன் மனைவிதான் சிகப்பி என்றால் சரிதான். அந்த சிகப்பி என் அம்மாவுடன் உடன் பிறந்தவர் என்றால் சரிதான். சிகப்பி எப்போது இறந்தார் என்றால் 2020 ல் இறந்துவிட்டார். சிகப்பி இறப்பதற்கு முன்பு எத்தனை வருடங்களாக முடியாமல் இருந்தார் என்றால் 11 வருடங்களாக முடியாமல் இருந்தார். சிகப்பிக்கு இறுதியில் 2019 ல் சென்னையில் வைத்து புற்றுநோய்க்கான சிகிச்சை எடுத்தார்கள் என்றால் சரிதான். அங்கேதான் சிகப்பி இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான்.

3. உயில் எழுதிவைத்ததாக சொல்லியுள்ளது எங்கு வைத்து எழுதியது என்றால் காளையார்கோவிலில் வைத்து எழுதிவைக்கப்பட்டது. உயில் எழுதி வைத்த சமயத்திலும் சிகப்பிக்கு புற்றுநோய் முற்றி மிகவும் முடியாமல் தான் இருந்தார் என்றால் சரிதான். சிகப்பிக்கும், நாச்சியப்பனுக்கும் பிறந்த மகன் பெயர் சின்னையா என்றால் சரிதான். சின்னையாவும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் பெரியப்பாவின் வாரிசுகளில் தற்போது உயிருடன் இருப்பது வாதி மட்டும் தான் என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை உயில் எழுதி வைத்திருந்தால் செல்லாது என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை வாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் பெயரில் பட்டா ஏற்பட்டு நாளது தேதிவரை நானே அனுபவித்த சொத்துக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி சிகப்பி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா என் வசம் உள்ளதா என்றால் ஆமாம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி உயில் ஆவணத்தில் **(வா.சா.ஆ.3)** இணைக்கப்பட்டுள்ள பட்டா எண்.1258 ல் நா.சின்னையா கார்டியன் தாய் சிகப்பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நேரடியாக சிகப்பி பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றும், அது அவரது மகன் பெயரில் ஏற்படுத்தப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். மேற்படி உயில்படி தாவாச் சொத்துக்களை பட்டா மாறுதல் செய்து அனுபவத்தில் கொண்டுவரவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் அனைத்தும் என் பெரியப்பா நாச்சியப்பனின் தாத்தா நாச்சியப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், வழிமுறைப்படி அவரது தகப்பனார் சின்னையா நாச்சம்மை அனுபவம் செய்து வந்து, அவரது பின்னீடு அவருடைய வாரிசுகள் வாதியும், நாச்சியப்பனும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

5. தாவாச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், அதைபற்றிய விபரம் தெரியமால் என் பெரியம்மா எனக்கு உயில் சாசனம் எழுதிவிட்டதால் தாவா சொத்து அதன் அடிப்படையில் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் அனைத்தும் சின்னையா நாச்சம்மைக்கு பூர்வீக சொத்துக்கள்

என்றும், அதனால் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துக்களை என் பெரியப்பா நாச்சியப்பன் இறந்த பின்னீடு பூர்வீக சொத்துக்கள் என்பதால் அனைத்தையும் வாதி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா உயில் சாசனம் பி.வா.சா.ஆ.1 தற்போது வரை ஊர்ஜிதத்திற்கு வராததால் அதன் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என் பெரியப்பாவிற்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதற்குரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்தால் வாதி தாவாச் சொத்துக்களை விட்டு கொடுக்க தயாராக உள்ளார் என்றும் சொன்னால் அது என் பெரியப்பாவிற்கு கிரைய சொத்துதான்.

6. வாதியின் தாத்தா பெயரும் நாச்சியப்பன் என்று சொன்னால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் பெரியப்பா நாச்சியப்பனின் தகப்பனார் பெயர் சின்னையா என்றும், அதைத்தான் அவரது மகனுக்கு பெயராக வைத்துள்ளார் என்றும் சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது, என் பெரியப்பா மகன் பெயர் சின்னையா ஆகும். தாவா உயில் என் பெரியம்மா சுயநினைவில்லாமல் இருந்தபோது உற்பத்தி செய்யப்பட்டது என்றும், உயிலில் குறிப்பிட்டுள்ள பூர்வீக சொத்துக்கள் என்பதால் உயில் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல, அது என் பெரியம்மா சுயநினைவுடன் இருக்கும்போது எழுதப்பட்டதாகும்.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.